

# J. D., C. S. I. COUNCIL - 1999

## Council Unanimously Gives Assent to Constitutional Amendments

The Council of the Jaffna Diocese of the Church of South India, which met on the 25th, 26th 27th of February 1999, unanimously accepted and approved the amendments to the C S I Constitution

The amendments were tabled and explained by, Mr. G. Rajanayagam who participated in the Special Session of the 26th Synod held in Madras in January 1999.

The following are some of the important amendments:

(a) A separate chapter on "the Mission of the Church".

**Bishopric**

(i) A PRESBYTER of the CSI should be of 60 years of age to be considered for the Bishopric.

1. (ii) **Duration of Appointment**

The Bishop of a Diocese shall remain Bishop of the Diocese unil he resigns, or accepts the charge of another Diocese, or depart permanently from their Diocese or deprived of his charge by sentence of the Court of Synod, or be adjudged by the Executive Committee of the Synod to be mentally physically or otherwise incapable of discharging the duties of his Office. A BISHOP SHALL RETIRE ON COMPLETION OF FIFTEEN YEARS SERVICE AS DIOCESAN BISHOP OR ON REACHING 65 YEARS OF AGE WHUCHEVER IS EARLIER.

Note: The limitation of term shall apply only to persons appointed as Diocesan Bishops after this rule comes into force).

2. **Order of Sisters**

At the time of the union there were special Orders for women in diffrent dioceses and several deaconesses from diffrent traditions working in the Church. To strengthen the witness of all these special groups they were brought together, and, after considerable preparations, the C S I Order of Sisters was inaugurated on the first of June in 1952.

The order is meant for women who feel called for a life-long service in the Church and live a life of celibacy, service and prayer. They may serve in the educational, medical social or pastrol ministry of the Church.

The Order shall be governed by a constitution approved by Synod.

3. **Diocesan Council**

Nomirated members in the Council shall not exceed 10. Every Diocesan Council shall ensure that at least 25% of the lay members are women and 25% youth under 35 years of age.

**Membership**

All Presbyters in active service in the Diocese, whether in Pastorates or in Institutions under the Diocese, or appointed to responsible Offices or spheres of work in the Diocese.

4. **Synod Executive Committee**

The Syuod Executive Committee shall appoint from among its members a Working Committee consisting of the Officers of the Syond and ONE PERSON FROM EACH DIOCESE WHO SHALL BE THE BISHOP, A PRESBYTER OR A LAY PERSON BY TURNS. At least 3 SUCH MEMBERS SHALL BE WOMEN IN ADDITION, THE EXECUTIVE COMMITTEE SHALL ELECT FROM AMONG THEME FOUR WOMEN TO THE Working Committee.


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 159 Jaffna Friday 12th March 1999 No. 06

RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE


### Christion Missions In India

Though Christians constitute a mere 2 34 percent of of the national population that is no way deterred the missionary zeal. There are as many 32101 Christian institutions nationwide imparting education to 9587838 students over 4800 hospitals 683 homes for aged and the handicapped. 163 homes dedicated to those afflicted by leprosy. Run with the help of 26 347 priests and 72 000 nuns. Funds come from locals and donors in the west especially U S and Europe in 1996 – 97 Rs 2571 . 69 crore was remilted for 12136 Christian organizations in India. — Outlook.

## Phillip Annai

Phillip annai who was serving at Jothi Nilayam Ashram in Batticaloa arrived in Christa Seva Ashram after the demise of Sevak Sam Alfred. The Ashram Board is meeting on monday the 1st March to decide on the administration set up of the Ashram.

### Peradeniya Universty

The University of Peradeniya has informed that it will receive applications from eligible candidates to be registered as External Students of the Uuiversity.

Students who have passed three subjects in one sitting at the G. C. E. (Advanced Level) Examination and had obtained a total of 180 marks in all the subjets were eligible to be registered as External Students, for General Arts Qualifying Examination. The candidates are asked to send their applications before 30th March 1999 to the Deputy Registrar, External Examination Branch, Old Galaha Road Peradeniya.

### Eight pistol Groups in Jaffna

The Defence Minisiry sources informed that eight groups with pistols have now infilrated into Jaffna. The sources also said that in each group there were three persons' These groups have been recruited by the L T T E recently and trained by them, The Sources also said that new persons have been sent to Jaffna in order to avoid identification by the rival parties. – 'Uthayan

### Some prominent B. J. P. M. Ps From Christian School's

- L. K. Advani: St. Patricks Karachi
- T. N. Chaturvedi: Diamond Jubilee College Kanpur and Christ Chureh College, Kanpur
- Satya Pal Jain: Christian High School, Kharar
- Madan Prasad Jaiswal: Eyying Christian College Allahabad
- Dilip Singh Judev: Mayo College, Ajmer
- Rita Verma: Ursulain College, Ranchi
- Vijayaraje Scindia: Home and Besant Col ege, Varanasi
- Vinod Khanna: St. X viers Mumbai. His two children study at Cathedral, Mumbai
- Master Mathan: St Joseph's Ooty and St Joseph's Bangalore
- Sangeeta Singh Deo: Convent of Jesus & Mary and Jesus and Mary College, Delhi
- Divya Singh Maharani: Isabella Thorburn College, Lucknow — 'Outlook'

### New Telephone.

The Depatment of Telecommunications have installe a new telephone for the Bishop's House. The telephone (Vaddukoddai; 226) ceased to be operative after 1985 Thee number of the new telephone is 0094—070 21 24 24

## MPs IN CHRISTIAN SCHOOLS

WHAT's common to L. K. Advani, T N. Chaturvedi, Vinod Khanna and Madan Prasad Jaiswal? They are BJP MPs and all of them have been to a missionary school or college. Of the nearly 180 BJP MPs as many as half have studied in Christion - run institutions. Their children and grandchildren go to convent schools as well. So when the Prime Minister seeks a national debate on conversions, it may be relevant for him to cast an eye on his own flock. Exen Rits Verma, MP from Dhanbad and convenor of the Swadeshi Jagaran Manch Mela, who did her matriculation from Ursulain College in Ranchi and went on to do a PhD, gleefully remarks "I have always been a first class student" Which prompts the question. Are these "centres of evangelistion, conversion and deculturisation" good only for those living in cities and "harmful" for the poor?

— 'Outlook'

# 21ம் நூற்றாண்டின் தலைவாயிலில் தென்னிந்திய திருச்சபை

## திறப்பு விழா

தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனம், வட்டுக்கோட்டைக்கு தெற்கே அமைந்துள்ள கொட்டைக்காடு என்ற கிராமத்தில் பல வருடங்களாக திருப்பணி செய்து வருகின்றது. 1993ம் ஆண்டு அப்பகுதியில் உள்ள சிறுபிள்ளைகளின் நலன் கருதி ஒரு சிறுவர் பராமரிப்பு நிலையத்தை நமது திருச்சபை ஆரம்பித்து, அப்பகுதியை சமாதானக் கோட்டை என்ற புதிய பெயரில் அழைத்தது. அப்பகுதியில் செய்யப்பட்ட நற்செய்தியின் பலனாக பலர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்த்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுக்குரிய வழிபாடு சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டு வந்தது. இடப்பெயர்வுக்கு பின்பு அந்த சிறுவர் பராமரிப்பு நிலையக் கொட்டில் இடிந்து போன காரணத்தினால். ஒரு சிறிய வீட்டில் சிறுவர் பராமரிப்பு நிலையமும் வழிபாடும் நடந்துவந்தது. இந்நிலையில் 1999 ஆண்டு யாழ்ப்பாணக்கல்லூரி, அப்பகுதியில் ஒரு அழகான ஆலயத்தை கட்டித்தந்தது. இவ்வாலயம் 26 2 99 மாலை 4 மணிக்கு பேராயர் கலாநிதி சு. ஜெபநேசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பிரதிஷ்டை வழிபாடு நடாத்தப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரி பான்ட் இசையுடன் ஆரம்பமான இந்த வைபவம் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள், தென்னிந்திய திருச்சபை யாழ்மாவட்ட ஊழியர்கள், அனைத்து திருச்சபைகளின் பிரதிநிதிகள், மற்றும் சமாதானக்கோட்டையின் பெருந்திரளான மக்கள் மத்தியில் சிறப்பாக நடந்தது. வழிபாடு முடிந்ததும் அனைவருக்கும் சுற்சண்டு கொடுக்கப்பட்டது.

## மும்மொழி...

எண்ணியர் திண்ணியர் ஆகப் பெறின்? எனுந் திருக்குறளுக்குப் முழுப் பொருள் ஆகிவிடுகிறார்.

தன்னிகரே இல்லாத் தத்துவச் சுரங்கமாகிய 'திருக்குறளுக்கு' எல்லீஸ்துரை எழுதிய உரையிலே சிந்தாமணி, புறநானூறு, நாலடியார், பாரதம் (வில்லிப்புத்தூரார்) ஆகிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. இது, அவரின் விரிந்தகன்ற தமிழ்நூலறிவுக்குச் சான்றாகின்றது. தமிழ்ச் செய்யுள்கள் புனைவதிலே மிகுந்த விருப்பமுள்ளவராகத் தெரிகின்ற எல்லீஸ், மிகச் சிறந்த கவிஞராகிய இராமச்சந்திரக் கவிராயரின் உற்ற நண்பனாக இருந்தார். எல்லீஸ் துரையின் 'தமிழ்க் கவித்திறனை' படித்து அறிவதற்கு, அவர் பாடிய செய்யுள்கள் எதுவுமே நம்மை வசம் கிடைக்காமற் போயின. ஆயினுங் கூட, தனது உற்ற தோழனாகிய இராமச்சந்திரக் கவிராயரைப் புகழ்ந்து,

''செந்தமிழ்ச் செல்வனுமோராயி
ரந்தலைச் சேடனும்யாழ்
சுந்தரத் தோடிசை வல்லோனும்
யாவரும் தோத்திரஞ் செய்
கந்தனைச் சொல்லுங் கவிராமச்
சந்திரனைக் கண்டு வெட்கி
அந்தர வெற்பிழி பாதாளந்
தேடியடங்கினரே!''

எனப் பாடிய தமிழ்ப்பாடலொன்று 'தனிப்பாடல் திரட்டிலே' இடம் பெற்றுள்ளது. அதைவைத்தே எல்லீஸ் துரையின் தமிழ்ப்புலமையை உணர்ந்து கொள்ளலாம். அத்தகைய தமிழ்ச் சுவைஞரான எல்லீஸ் துரை, முழுத் திருக்குறளுக்கும் ஆங்கில விளக்கவுரை எழுதி அச்சிலேற்றுவதற்கு முன்பாகவே இராமநாதபுரத்திலே மரணம் எய்தியமை, தமிழினத்திற்கும், தமிழ் மொழிக்கும் நேர்ந்த பெருங்கேடு.

ஜெ. இ ஜெயசீலன்
உதவி நூலகர் யாழ் கல்லூரி

## ஆதீன மாநாடு 1999

21ம் நூற்றாண்டை வரவேற்க இன்று உலகம் தன்னை தயார்ப்படுத்திக் கொண்டுள்ளது. புதிய அரசியல் பார்வைகள், புதிய பொருளாதார திட்டங்கள் நவீன தொழில் நுட்ப வளர்ச்சி, அறிவியல் மறுமலர்ச்சி, இவைகளோடு 21ம் நூற்றாண்டை வரவேற்க உலகம் ஆயத்தமாகிக் கொண்டுள்ளது. இருந்தபோதிலும் மொழியால், நிறத்தால், மதத்தால், இனத்தால், நிலத்தால் இனங்களுக்குள் ஏற்பட்டுள்ள பிணக்குகள் உலகத்தில் அனேக நாடுகளை குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளை எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின்தள்ளி 21ம் நூற்றாண்டின் வளர்ச்சி பெறாத மனித வர்க்கமாக மாற்றியுள்ளது. இந்தவகையில் 1999ம் ஆண்டு நமது ஆதின மகாநாடு பல கேள்விகளுக்கு விடையாகவும் சோர்ந்து போனவர்களுக்கு உற்சாகத்தையும் அளிக்கக்!! கூடியவகையில் அமைந்தது, என்னை மிகவும் கவர்ந்தது.

பெப்ரவரி மாதம் 25ம் திகதி வட்டுக்கோட்டை நமது திருச்சபை, ஊழியர்களையும் சபைப் பிரதிநிதிகளையும் வரவேற்க ஆயத்தமாகி இருத்ததை கவனிக்கக் கூடியதாக இருந்தது. யாழ். மாவட்டத்திற்கு வெளி இடங்களில் இருந்து சபை ஊழியர்களும் பிரதிநிதிகளும் வராவிட்டாலும் யாழ். மாவட்டத்திலுள்ள ஊழியர்களும் பிரதிநிதிகளும் அனேகமாக வந்திருந்தார்கள். அருட்திரு. சூரியகுமார் அவர்களின் இறைவழிபாட்டுடன் ஆதீன மகா நாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாயின. வழிபாடு முடிந்ததும் யாழ்ப்பாணக் கல்லூரி 'ஒட்லி' மண்டபத்தில் மகா நாடு ஆரம்பமானது. முதலில் 1998ம் ஆண்டு மறுமைக்குள் சென்றவர்க்கான இரங்கலுரைகள் நடைபெற்றன.

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த பேராயர் உரை சமகால பல கேள்விகளுக்கும் பிரச்சனைகளுக்கும் தீர்க்கமான பதிலை அளித்தது. குறிப்பாக தெற்காசியாவில் கிறிஸ்தவசமயத்திற்குஏற்பட்டுள்ள எதிர்ப்புக் குறித்து பேராயர் அவர்கள் மிகவும் உருக்கமாகத் தமது உரையில் குறிப்பிட்டார். அந்த உரையில் இப்பிரச்சனைகளை இறையியல் ரீதியில் பேராயர் விளக்கம் கூறியது என்னை மிகவும் கவர்ந்தது.

''நமது திருச்சபை 19ம் நூற்றாண்டின் திருச்சபையை நெருங்கியதாக அல்ல அது 1ம் நூற்றாண்டின் திருச்சபையை நெருங்கியதாக உள்ளது''

ஆகவே அர்ப்பணிப்பும் உறுதியான விசுவாசமும் 21ம் நூற்றாண்டின் திருச்சபைக்கு அவசியமானது என்பதை பேராயர் உரையில் மறைவாக தொனித்து நின்றதை நான் உணர்ந்து கொண்டேன். பேராயரின் உரையை அனைவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டோம்.

1998ம் ஆண்டு முழுவதும் நமது திருச்சபை செய்த திருப்பணிகளின் விவர அறிக்கைகள் அனைவரும் வியக்கத்தக்கதாக அத்துறைகளின் செயளாலரால் வாசிக்கப்பட்டது. சமூகப்பணி கல்விப்பணி இறையியல்பணி நற்செய்திப்பணி என்று பல துறைகளையும் சார்ந்த அறிக்கைகள் வாசிக்கப்பட்டன. இவ்வறிக்கைகள் வாசிக்கப்பட்ட இடை நேரங்களில் 1998ம் ஆண்டில் நடைபெற்ற ஆதீன செயற்குழு கூட்ட அறிக்கைகள் ஆதீன பிரதிநிதிகளை வாசித்து கேள்விகள் கேட்கும் படி கூறப்பட்டது. இவ்வருடம் ஆதீன செயற்குழு அறிக்கைகள் யாவும் தமிழில் மொழி பெயர்த்து அச்சிடப்பட்டுள்ளது. சகல பிரதிநிதிகளும் வாசித்து விளங்கி கொள்ள ஏதுவாக இருந்தது. முதல் நாள் கூட்டம் தொடர் பல கூட்ட அறிக்கைகள் வாசித்து ஏற்று கொள்ளுதலோடு நிறைவு பெற்றது.

இரண்டாம் நாள் அருட் திரு S. C ஆர்னல்ட் அவர்களின் இறைவழிபாட்டுடன் ஆரம்பமாகிய ஆதீன மகாநாட்டின் நிகழ்வுகள் வழிபாடு முடிந்ததும் ஒட்லி மண்டபத்தில் தொடங்கியது. அன்று பேராயரின் உரை அனைத்து மகாநாட்டின் உறுப்பினர்களுக்கும் அச்சிட்டு கொடுக்கப்பட்டது. பின்பு 1998ம் ஆண்டின் செயற்குழு அறிக்கையில் இருந்து பல கேள்விகள் எழுந்து சூடான விவாதங்கள் நடைபெற்றன. இவ்விவாதங்களில் அனேகமாக சபை பிரதிநிதிகள் கூடுதலாக பங்கு பற்றியதை என்னால் காணக்கூடியதாக இருந்தது. எல்லா கேள்விகளுக்கும் பேராயர் அவர்கள் விளக்கமான பதிலையும் தெளிவையும் கொடுத்தார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகளில் திருச்சபை ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து பேராயர் அறிவித்தார். இது சபை ஊழியர்களுக்கு மகிழ்ச்சிக்குரிய விடயமாக இருந்தது. இன்றைய நாளின் அறிக்கைகளில் இருந்து எழுந்த கேள்விகளுக்கு சூடான விவாதம் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வுகளின் முடிவில் சமாதானக்கோட்டை ஆலய பிரதிஷ்டை வழிபாட்டில் ஆதீன மகா நாட்டிற்கு வந்திருந்த அனைத்து மகாநாட்டு உறுப்பினர்களும் காரிலும் பஸ்சிலும் அழைத்துச்செல்லப்பட்டார்கள். பேராயர் கலாநிதி சு ஜெபநேசன் அவர்களால் சமாதானக் கோட்டை ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வாலயம் யாழ்ப்பாணக் கல்லூரியினால் கட்டிக்கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்றாம் நாள் பேராயர் கலாநிதி சு ஜெபநேசன் அவர்களின் தலைமையிலான திருவிருந்து வழிபாட்டுடன். மகாநாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாயின. திருவிருந்து வழிபாட்டில் அனைத்து மகா நாட்டு உறுப்பினர்களும் பக்தி பூர்வமாக கலந்து கொண்டார்கள். திருவிருந்து வழிபாடு நிறைவுற்ற பின்பு ஒட்லி மண்டபத்தில் மகாநாடு ஆரம்பமானது. அன்றைய ஆரம்ப நிகழ்வாக தென்னிந்திய திருச்சபையின் யாப்பு சீர்திருத்தம் குறித்தான விளக்கம் அருட் திரு நவீந்திர அனுகூலன் தலைமையில் ஆரம்பமானது.

தென் இந்திய திருச்சபை சினட் மகா சபை பிரதிநிதியான திருவாளர் ஜி. இராஜநாயகம் அவர்கள் யாப்பு சீர்திருத்தம் குறித்து மிகவும் இலகுவாகவும் தெளிவாகவும் விளங்கப்படுத்தினார். யாப்பு சீர் திருத்தம் குறித்து அனேகமாக மகா நாட்டு உறுப்பினர்கள் யாவருமே மாற்றியமைக்கப்பட்ட புதிய சட்டங்கள் குறித்து மிகவும் உற்சாகமாய் வரவேற்றார்கள். இருந்தபோதிலும் சிலர் சில மாற்றங்களை குறித்துப் பல கேள்விகளைத் திரும்பத் திரும்ப எழுப்பினார்கள். இறுதியாக புதிய யாப்பை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டோம்.

புதிய யாப்பு குறித்து பல ஊழியர்கல தங்களுக்குள் விவாதித்தை நான் அவதானித்தேன். இது இளைய சமுதாயத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கும் யாப்பு என்றும். 21ம் நூற்றாண்டில் இப்படியான மாற்றத்தை திருச்சபை ஏற்றுக்கொள்ளாவிடில் பல தோல்விகளை திருச்சபை சந்திக்கும் என்றும் தங்களுக்குள் விவாதித்து யாப்பு குறித்து மனநிறைவு கொண்டதை காணக்கூடியதாக இருந்தது.

மதிய உணவின் பின்பு மீண்டும் கூடினோம். யாவரும் எதிர்பார்த்திருந்த நிர்வாகிகள் தெரிவு செய்யும் பணி ஆரம்பமானது. எல்லோரும் ஏகமனதாக நிர்வாகிகளைத் தெரிவு செய்ததை நான் காணக்கூடியதாக இருந்தது.

இறுதியாக பேராயர் அவர்களின் நிறைவுரை நடைபெற்றது. திருச்சபையானது நமது சமுதாயத்தில் மிகவும் சிறிய மக்கள் கூட்டத்தை கொண்டதாயினும் அது மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கின்றது என்பதையும், செயல்படும் திருச்சபையாக விளங்க வேண்டும் என்பதையும் வலியுத்தினார்,

'பரலோக இராஜ்யம் புளித்த மாவிற்கு ஒப்பாய் இருக்கின்றது அதை ஒரு ஸ்திரி எடுத்து முழுவதும் புளிக்கும் வரைக்கும் மூன்று படி மாவிலே அடக்கி வைத்தாள்.' (மத் . 13: 33)

இந்த வசனத்தின் அடிப்படையில் திருச்சபை ஊழியர்களுக்கும் ஆதீனப் பிரதிநிதிகளுக்கும் திருப்பணிக்கான அழைப்பைப் பேராயர் விடுத்தார்.

இறுதியில் பேராயரின் ஜெபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் மகா நாடு நிறைவடைந்தது.

சகோ. தி யோசுவா

உதயதாரகை
12-3-99


## தாரகை ஒளி

நாம் செயல்களினாலே தேடும் சிநேகிதரிலும் நம் மொழிகளால் தேடும் பகைவர் அதிகம்

—கொலின்ஸ்

# மும்மொழி வல்லுநர் 'எல்லீஸ்'துரை!

அவர் ஓர் ஆங்கிலேயர்: ஆனால் தமிழகத்தின் சென்னையில் அரசாங்க ஊழியராகக் கடமையாற்றியவர்; தீவிரமான தமிழ்ச் சுவைஞர்! அதன் காரணமாகத் திக்கெங்கும் வாழ்வியற் கருத்துக் களஞ்சியமான 'திருக்குறள்' தெளிவுறப் பயின்று, அதன் முதல் பதின் மூன்று அதிகாரங்களுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதி அச்சேற்றினார். 'ஐத்தராலமிஷன்' ஊழியராவதற்காக தன் அரசாங்க வேலையைத் துறந்து 'பேர்லின்' நகருக்குச் சென்றார்; சமய நூல்களைக்

### 10- 3- 99 நினைவு தினம்

கற்றுத் தெளிந்தார்; குருப்பட்டம் பெற்றார்; வணக்கத்துக்குரிய பாதிரியாராக மீண்டும் தமிழகத்தின் சென்னைக்கு வந்தார். வந்துதான் வந்தார்; தன் கடன் 'மதப்பணி மட்டுமே' செய்து கிடப்பதே, என்று ஒதுங்காமல், ''தமிழ்ப்பணி'' பல செய்யுந் தலைமையாளர் ஆனார்.

அது ஆங்கிலேயர் ஆட்சிக் காலம். இந்தியா முழுவதுமே அவர்களின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அந்தக் காலத்தில்தான், எல்லிஸ்துரை, என்ச் சுருக்கமாக அழைக்கப்படும். பிரான்சிஸ் வைற் எல்லிஸ் (FRANCIS WHYTE ELLIS) அவர்களின் மதப்பணியும், தமிழ்த்திலே வேர் ஊன்றித் தழைத்தன. தொடக்கத்தில் சென்னையிலே அரச வேலைகள் பல செய்து சென்னை நகர அரச அதிகாரக இருந்தபோதே வித்துவான் சாமிநாதபிள்ளையிடம் தமிழ்மொழி ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தார்.

''கற்க கசடறக் கற்க
கற்றவை கற்றபின் நிற்க
அதற்குத் தக.''

என்கிற நேரிய குறள் நெறியின் வழி ஒழுகிய எல்லீஸ் அவர்களின் தமிழ்ப்பணி மகத்தானது. தாய் மொழியாகிய ஆங்கிலத்துடன், தமிழ் மொழியிலும், கூடவே வடமொழியிலும் தேர்ச்சி பெற்ற எல்லீஸ், முழுமையான மும் மொழி வல்லுனர்.

செவ்வனக் கல்விச் சங்கத்தின் பொறுப்பு மிகுந்த உறுப்பினராகி, தமிழ்ப்புலவர் முத்துசாமிப்பிள்ளை என்பவரைத் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்பி ஆங்காங்கே மறைந்து கிடந்த பல ஏட்டுச் சுவடிகளை தேடிச் சேர்ப்பித்தார்: வீரமாமுனிவரின் வாழ்க்கைவரலாற்றை முத்துசாமிப்பிள்ளையைக் கொண்டே தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதுவித்தார். எண்ணத்தில் உதித்தவற்றை ஏற்ற வண்ணஞ் செயலாக்குவதில் திண்ணியராகிய எல்லீஸ் எண்ணிய எண்ணியாங்கு எய்துப

(2ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் எழுப்புதற் கூட்டங்கள்

இம் மாதம் 2ம் 3ம் 4ம் திகதிகளில் யாழ் கிறிஸ்தவ ஐக்கியத்தினால் எழுப்புதற் கூட்டங்கள் யாழ் பரி பேதுரு ஆலயத்தில் (றிம்மர் மண்டபத்தில்) நடைபெற்றன.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் மெதடிஸ்த, அங்கிலிக்கன், தென்னிந்திய திருச்சபையினர் ஒன்று கூடி இந்தக் கூட்டங்களை நடத்தியுள்ளனர். இது மிகவும் பாராட்டத்தக்க விஷயமாகும்.

கொழும்பு வெள்ளவத்தை மூர் றோட் மெதடிஸ்த திருச்சபைகுரு வண J. விவேகநாதன் இக் கூட்டங்களில் பிரசங்கம் செய்தார். ஆபிரகாமின் விசுவாசத்தை எடுத்து விளக்கி, நாம் எவ்வாறு ஆபிரகாமைப்போல் நம்பிக்கையில் வளரவேண்டும் என்று தெளிவாகக் கூறினார்.

இம் முறை எழுப்புதற் கூட்டங்களுக்கு வந்தவர்களின் தொகை குறைவாக இருந்தது ஆனால் யாழ் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்திற்கு இது ஒரு முக்கியமான மைற்கல் ஆகும் நாம் இந்தக்கூட்டங்களை நடாத்தியதன் மூலமாகக் கற்றுக்கொண்ட பாடங்கள் பல. யாழ் கிறிஸ்தவ ஐக்கியத்தையும் அதன் செயலாளர் வண ஞான பொன்ராஜாவையும் நாம் பாராட்டக்கடமைப்பட்டுள்ளோம்.

இனி வருங்காலங்களில் யாழ்ப்பாண நகரில் இந்தக் கூட்டங்களை நடாத்த முடியுமா? என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. இன்று அமுலில் இருக்கும் ஊரடங்கு உத்தரவினால் மக்கள் மாலை நேரங்களில் நிம்மதியாக யாழ்ப்பாணத்தில் நிற்கமுடிவதில்லை. எல்லோரும் கைக்கடிகாரங்களைப்பார்த்துக்கொண்டு அந்தரத்தில் நிற்கின்றனர். கிராமப் புறங்களில் இவற்றினை நடாத்தினால் நற்றுதுப்பணியாகவும் அமையும், அங்கு நிரந்தரமாக வாழும் மக்கள் இரவு 8 30 மணி வரை கூட்டங்களில் கலந்து கொள்வர். கட்டைவேலித்திருச்சபையில் நடந்த கூட்டங்களில் மக்கள் பெருந்தொகையினராக வந்து கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்

இன்னிசை நிகழ்ச்சிகள் பாடற்பயிற்சிகள் என்பன சிறப்பாக அமைந்தன! இந்த விடயங்களில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது இன்று பழம்பெரும் திருச்சபைகளை விட்டு வெளியேறும் வாலிபர் கூட்டம். இசை நிகழ்ச்சிகளைப் பெரிதும் விரும்புகின்றது, சிறந்த பாடகர்கள் இந்த நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும்படி செய்தல் அவசியம். இந்த வருடம் நடைபெற்ற எழுப்புதற் கூட்டங்களிலே திருச்சபைகளில் இசை வல்லுனர்கள் பங்கு பற்றினர். இன்னும் சில கல்லூரிகளின் பாண்ட் நழுவினரும். இசைக் குழுவினரும் சேர்க்கப்பட்டு இசை மழை மூன்று நாட்கள் பொழிய வேண்டும்.

கூட்டங்களுக்கு வருபவர்கள் பெருந் தொலைவான இடங்களிலிருந்து வருகின்றமையினால் எல்லோருக்கும் தேனீர் அல்லது குளிர் பானம் வழங்கப்படுதல் நன்று.

இன்று நாட்டிலுள்ள சூழ்நிலை காரணமாக இந்தியப் பேச்சாளரைக் கொண்டு வருவது கடினம். ஆனால் சில திருச்சபையினர் எப்படியோ கொண்டு வந்து சேர்த்து விடுகின்றனர். நமது திருச்சபைகள், கொழும்பிலுள்ள தமது அமைப்புக்களுடன் கலந்தாலோசித்து பிரயாண அனுமதிக்கு முயற்சி செய்ய வேண்டும் சாது செல்லப்பா சாம் ஜெபத்துரை போன்ற ஒருவரை வரவழைப்பது என்று ஒரு வருடத்திற்கு முன்னரேயே முடிவு செய்து அவரின் பிரயாண அனுமதிக்காகப் பாடுபட்டால், இறைவனின் அருளால் வெற்றி கிடைப்பது நிச்சயம்.

இந்த வருடம் பல கிராமங்கள். மத்தியில் எழுப்புதற் கூட்டங்களை நடாத்தி முடித்த யாழ் கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் வருங்காலங்களில் இவ் விடயங்களில் கவனம் செலுத்தவேண்டுமென்றே 'உதயதாரகை' விரும்புகின்றது.

எஸ். ஜே. எழுதுவது

## அலெக்சர்ண்டர் போப்



பேராயர் சபாபதி குலேந்திரன் ஒரு முறை என்னுடன் பேசும் பொழுது தான் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்திருக்க வேண்டும் குறிப்பிட்டார் மேலும் அந்தப் பாட்டிருக்கில்லே! Thus let me live unseen unknown Thus unlamented let me die'' அது மாதிரி போய்விட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அவர் மறைந்து சில வருடங்களுக்குப் பின்னர்தான் அலெக்சாண்டர் போப் எழுதிய இந்தக்கவிதை எனக்குக் கிடைத்தது

போப்பின் ஆங்கிலக்கவிதையையும் தமிழ் மொழி பெயர்ப்பையும் ஈண்டு தருகின்றோம்.

அவசரமும் கழுத்தறுப்புப் போட்டிகளும் நிறைந்த உலகிலே போப் அவர்களின் சிந்தனை புத்துணர்ச்சி அளிக்கின்றது.

Happy the man, whose wish and care
A few paternal acres bound,
Content to breathe his native air,
In his own ground.
Whose herds with milk, whose fields with bread,
Whose flocks supply him with attire;
Whose trees summer yield him shade,
In winter fire,
Blest who can unconcerndly find
Hours, days, and years slide soft away
In health of body, peace of mind
Quiet by day.
Sound **sleep** by night, study and ease,
Together **mixt sweet** recreation;
And innocence, **which most** does please
with **meditation**
Thus **let me live, unseen** unknown
Thus unlamented, **let me** die;
Steal from the **World** and not a stone
Tell where I lie.

பேறுபெற்றவன் யார்? எனக்கேட்கின், பரம்பரைச் சொத்தாய் வந்த காணியில், மண்ணின் வாசனை கலந்த காற்றினை இன்புடன் நுகர்ந்து வாழ்பவன் தானே! பசு நிரைகள் பாலைப் பொழிய, வயல்நிலங்கள் நெல்மணி வழங்க, ஆட்டு மந்தைகள் கம்பளி தந்திட, கோடையில் நிழலையும் மாரியில் விறகையும் மரங்கள் அங்கே வாரி வழங்க, நேரமும் பொழுதும் வாழ்வும் வயதும் மெள்ள ஓடி மறையவும் கலங்காநோயற்ற உடலும் நிறைவுள்ள மனமும் நாள் முழுவதும் அமைதி தந்திட, நித்திரா தேவி இரவினில் அணைக்க, படிப்பும் ஓய்வும் கலந்த வாழ்வாய், இனிமை நிறைந்த பொழுதுபோக்குடன் தூய்மை மனதுடன் தியானமும் துலங்க, ஓசைப்படாமல் உலகறியாமல் இப்படி என்னை வாழ விடுங்கள், போற்றுதல் இன்றிப் புலம்புதலின்றி மெள்ள உலகினை நீங்க விடுங்கள், கல்லோ சிலையோ சமாதிப் பொருளோ என்படுக்கையைக் காட்ட எழுப்பிடுங்கள்.

## Wedding

The marriage of Mr. Samuel Balasingam Thevananthan son of Mr. & Mrs. Balasingam of Karaveddy to Magdaline Selvini daughter of the late Mr. A. Sellathurai & Mrs A. Sellathurai of Pandaiterruppu was solemnized on the 26th of December, 1998 at 10. 30 a. m. at C. S. I. Church, Colombo.

Rev. Dr. Johan Hall of the Tooting Church, London preached the homily. The service was conducted by Rev T. Thevanesan and the nuptial ceremony was conducted by Rev. Gnanaponrajah

## A Service of Blessing

A service to bless the marriage of Mr. R. Raveendramohan, Warden Boys' Home, Arulmanai, to Miss Jasminie Rajasundary was conducted at 3. 30 p. m. on 30-12-1998 at C S I Church.

Rev. T. Jeyachandran led the service assisted by Rev. S. Vivekanathan and Rev. Enoch Punitharajah. Rev Dr. D. S. Thiyagarajah preached the homily.

## SERVICE IN COLOMBO

A Service in memory of the life and work of Prathama Sevak Rev. Sam Alfred (Sam Annan) and for the repose of his soul was held in the C S I Colombo Church on Tuesday the 28th January 1999, the same day his mortal remains was interred in the Christa Seva Ashram at Maruthanamadam Uduvil, Jaffna. A large and representative gathering of the members and clergy of the Anglican, the Methodist, the C S I Churches and friends were present at this service.

The Rt. Rev. Kenath Fernando, Bishop Colombo the Venerable Arch Deacon Sarvanandan, Rev. Vivekanandan of the Methodist Church, Rev Jeyachandran and Rev. Enoch Punitharajah jointly conducted the service. Violin prelude was played by Mrs. Anandanayagam and Mrs. Mahilrajan. The service started with a solemn hymn rendered with feeling by Rev Enoch, Rev. Jeyachandran called for worship.

Mr Jeeva Gandhi & Devapriya read the Bible Lessons. Tributes to the life of Sam Annan were paid by Mr Nirmalan from Kiran Ashram & Dr. E. S. Thevasagayam.

Bishop Fernando during his sermon also paid glowing tribute to the sterling character work of Sam Annan

Rev. Sarvananthan & Rev Vivekananthan led the congregation in prayers. Grace was pronounced by the Bishop Fernadno

This service was organised by the Ashram Committee in Colombo.

## Sam Annan's Memorial Service

The Ashram Board will conduct a Memorial Service on Monday the First March to thank god for the life and witness of Sevak Sam Alfred.

The Board has also invited Rev. S. Vivekanathan of Methodist Church Moor Road Wellawattai to be the preacher at this Service.

## OBITUARY

We are sorry to record the death of the following persons which took place in Colombo at the end of the year 1998

Mrs. Rosalin Arunthava rani Anandarajah died on the 15th of November 1998 A service to thank God for the life and witness took place in the C. S. I. Church on the 5th December, 1998

Mr. Ben Rajaratnam died in his home at Dehiwela on the 19th December, 1998. A service of thanksgiving for his life, took place on the 18th of February, 1999, at his residence.



*In Grateful Memory of*

**Mrs G. PATHMINI SUGUNANANTHAN**

Born 5- 4- 1943

Departed 27- 9- 1988

Give rest, Oh Christ
to Thy servant with
Thy saints
Where sorrow and pain
are no more
Neither sighing but life
Everlasting

005

A Library built in her memory by her family at Levi Spaulding Boys Home, Vaddukoddai will be declared opened on 05- 04- 99 at 4 30 p m by Prof. P. Balasundarampillai Vice Chancellor, University of Jaffna. Friends and relations are cordially invited.

## A Passage To Jaffna

During the hey day of the British Empire E. M. Forster wrote his famous novel 'A passage to India' it tells the story of two British Women who come to the sub continent to understand the real India. This novel is a pitiless exposure of the evils of the British rule in India, the degrading effects it had on the rulers and the ruled.

We are reminded of this book when we see the misery and anguish of the Tamil people in finding a passage to Jaffna. After Riverasa operation in 1995 the land route to Jaffna was permanently closed. For sometime two private companies "LION AIR" and "MONARA AIR SERVICES" were able to take passengers to Jaffna and back eventhough the charges were exhorbitant. When a Lion Air craft crashed on the 29th September 1998 even this facility came to a grinding halt. Once in a bluemoon a ship is arranged by the government to take passengers to Jaffna and back. There were rumours of some individuals floating a shipping company to take passengers to Jaffna. But so far no progress has been made. The Government has made several announcements that a regular shipping service will be launched to take passengers from Trincomalee to Jaffna

An application of an ordinary person for a permit to travel to Colombo has to be approved by five authorities two civilian and three military.

An application that originates in Colombo entails two to three months of druggery and toil in the military offices in Colombo. With such a hard earned permit a traveller alights Government plane putting his trust in God almighty

During the past sixteen years the people in the North have undergone much hardship. After the Reviresa operation in 1995 it was felt that Colombo will come closer to Jaffna and the people in the North will be able to travel to the metropolis easily and transact business. But what was realized was pathetic. The family members are sccattered and the people in the North are cut off from the rest of the Island. Because of this erilous travel and red-tapeism qualified people in Jaffna want to leave for ever the land of their birth. The Government and the Military cannot close their eyes forever to this grim and frightening situation.



### COTTON NESATHURAI MATHER

87th BIRTHDAY REMEMBERANCE & 2nd DEATH ANNIVERSARY

Born: 12th March 1912 Called to rest 11th April 1997

**Beyond our sight**
Beyond our Touch
But not Beyond our Love.

BY

Your ever Loving

*Wife, Children - in laws & Grand Children*

*in U.K - Sri Lanka & Australia*

**Revd- Jeya Mather & Family**

Methodist Church
Kaddaively
Karaveddy

004

Registered as a News Paper at the G P. O. Sri Lanka. News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, Diocesan Complex Vaddukoddai on Friday the of 12th March 1999 published by G Nadaraja Diocesan office, Vaddukoddai